<u>சுருக்கம்</u>

மாநில நிதிப் பகிர்வு – மூன்றாவது மாநில நிதி ஆணையத்தின் பரிந்துரையின் அடிப்படையில் 2010–2011–ஆம் ஆண்டிற்கு பேரூராட்சிகளுக்கு குறைந்தபட்ச மாநில நிதிப் பகிர்வு மான்யத் தொகை ரூ.56,10,00,000/–ஐ ஏப்ரல், 2010 முதல் ஜனவரி, 2011 வரை 10 மாத சம தவணைகளில் விடுவித்து ஆணையிடப்படுகிறது.

---

<u>நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (பேரூ2) துறை</u>

அரசாணை (ப) எண். **241** நாள்: **17. 5. 2010**

**3, வைகாசி, திருவள்ளுவர் ஆண்டு 2041**

படிக்கப்பட்டவை:

1. அரசாணை (நிலை) எண்.199, நிதி (FCIV) துறை, நாள் 25. 5.2007.
2. பேரூராட்சிகளின் இயக்குநர் அவர்களின் ந.க.எண்.6700/2010/ஈ1, நாள் 07.4.2010.

*****

**ஆணை:**

மூன்றாவது மாநில நிதி ஆணையத்தின் பரிந்துரைகளின் மீது அரசு எடுத்த முடிவுகளின் அடிப்படையில், 2007–2008ஆம் ஆண்டிலிருந்து மாநில நிதிப் பகிர்வுத் தொகைகள் பகிர்ந்தளிக்கப்பட வேண்டும். அதன்படி, மூன்றாவது மாநில நிதி ஆணையத்தின் நிதிப் பகிர்வு பற்றிய அத்தியாயத்தில் உள்ள பரிந்துரைகளின் மீது அரசால் கொள்கை முடிவுகள் எடுக்கப்பட்டு முதலாவதாக படிக்கப்பட்ட அரசாணை மூலம் ஆணை வெளியிடப்பட்டுள்ளது.

2. முதலாவதாகப் படிக்கப்பட்ட அரசாணையில், பத்தி எண். 3 (ix)-ல் மாநில நிதிப் பகிர்வு ஒதுக்கீட்டில் ஒவ்வொரு பேரூராட்சிக்கும் குறைந்தபட்சமாக ஆண்டு ஒன்றுக்கு ரூ.10.00 இலட்சம் வீதம் 561 பேரூராட்சிகளுக்கும் ரூ.56.10 கோடியினை விடுவித்திடவும் எஞ்சிய தொகையை மக்கள் தொகை அடிப்படையிலும் விடுவிக்கப்பட வேண்டியுள்ளது என்றும், அதன்படி ஒவ்வொரு பேரூராட்சிக்கும் ரூ.10.00 இலட்சம் வீதம் 561 பேரூராட்சிகளுக்கும் ரூ.56.10 கோடியினை பிரித்து வழங்கப்பட வேண்டியுள்ளது என்றும், எனவே, ஒவ்வொரு பேரூராட்சிக்கும் வழங்கப்பட வேண்டிய தொகை ரூ.10.00 இலட்சத்தினை மாதம் ஒன்றுக்கு ரூ.1.00 லட்சம் வீதம் 561 பேரூராட்சிகளுக்கு ரூ.561.00 இலட்சம் என்ற விகித அடிப்படையில் ரூ.56.10 கோடியினை 10 சம தவணைகளில் ஏப்ரல்–2010 முதல் ஜனவரி–2011 வரையில் பிரித்து வழங்கிட ஆணை வேண்டி இரண்டாவதாகப் படிக்கப்பட்ட கடிதத்தில் பேரூராட்சிகளின் இயக்குநர் அவர்கள் அரசிற்கு கருத்துரு அனுப்பியுள்ளார்.

| | | |
|---|---|---|
| அ) | 2010–2011–ஆம் ஆண்டின் மாநில நிதிப் பகிர்வு ஒதுக்கீட்டுத் தொகை | ரூ.467,13,27,000/– |
| ஆ) | ஒவ்வொரு பேரூராட்சிக்கும் ரூ.10.00 இலட்சம் வீதம் 561 பேரூராட்சிகளுக்கும் மாதாந்திர அடிப்படையில் 10 தவணைகளில் விடுவிக்கப்பட வேண்டியது | ரூ. 56,10,00,000/– |

இ) எஞ்சிய தொகையினை 2001 மக்கள் தொகை அடிப்படையில் 561 பேரூராட்சிகளுக்கும் 14 சம தவணைகளில் பிரித்து வழங்கப்பட வேண்டியது. ரூ.411,03,27,000/–

3. அரசு கவனமாக ஆய்வு செய்த பின், பேரூராட்சிகளின் இயக்குநரின் கருத்துருவினை ஏற்று, ஒவ்வொரு பேரூராட்சிக்கும் குறைந்தபட்ச மான்யமாக ரூ.10.00 இலட்சம் வீதம் 561 பேரூராட்சிகளுக்கு, ரூ.56.10 கோடியினை (ரூபாய் ஐம்பத்தாறு கோடியே பத்து இலட்சம் மட்டும்) பகிர்ந்து வழங்கிட ஒப்பளிப்பு செய்து ஆணையிடுகிறது. இத்தொகை, ஒவ்வொரு பேரூராட்சிக்கும் மாதம் ஒன்றுக்கு ரூ.1.00 லட்சம் வீதம் 561 பேரூராட்சிகளுக்கும், 10 மாதாந்திர சம தவணைகளில் ஏப்ரல், 2010 முதல் ஜனவரி, 2011 வரையில் பகிர்ந்து வழங்கப்பட வேண்டும்.

4. மேலே பத்தி 3–ல் ஒப்பளிக்கப்பட்டுள்ள தொகையினை சென்னை (வடக்கு) சம்பள கணக்கு அலுவலகத்திலிருந்து பெற்று 561 பேரூராட்சிகளுக்கும் வழங்குவதற்கு பேரூராட்சிகளின் இயக்குநருக்கு அதிகாரம் அளிக்கப்படுகிறது.

5. மேலே பத்தி (3)–ல் ஒப்பளிப்பு செய்யப்பட்ட தொகை கீழ்க்கண்ட கணக்குத் தலைப்பின் கீழ் பற்று வைக்கப்பட வேண்டும்.

> “3604.00 உள்ளாட்சி மன்றங்களுக்கும் ஊராட்சி நிறுவனங்களுக்கும் இழப்பீடுகளும், ஒதுக்கீடுகளும் – 193 நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகள், அறிவிக்கப்பட்ட பகுதி குழுக்கள் அல்லது அதற்கு சமமான அமைப்புகளுக்கு உதவி –I – திட்டத்தில் சேராதது – AA – மாநில நிதி ஆணையத்தின் பரிந்துரையின்படி பேரூராட்சிகளுக்கு மானியங்கள் – பேரூராட்சி நிருவாக இயக்குநரின் நிருவாக கட்டுப்பாட்டில் உள்ளவை – 09 உதவித் தொகை – 02 மூலதனச் செலவுக்கான உதவித் தொகை **(DPC 3604 00 193 AA 0927)**”

6. இவ்வாணை நிதித் துறையின் அ.சா.எண். 24228/MAWS/2010 நாள் 11.5.2010–ல் பெற்ற இசைவுடன் வெளியிடப்படுகிறது.

(ஆளுநரின் ஆணைப்படி)

நிரஞ்சன்மார்டி
அரசு செயலாளர்.

<u>பெறுநர்</u>
பேரூராட்சிகளின் இயக்குநர், சென்னை–108.
சம்பளக் கணக்கு அலுவலர் (வடக்கு) சென்னை–1.
மாநில கணக்காயர், சென்னை– 9 / 18.

<u>நகல்</u>
செயலரின் தனி செயலர், ந.நி(ம)கு.வ.துறை, சென்னை 9
இயக்குநர், உள்ளாட்சி நிதித் தணிக்கை, குறளகம், சென்னை–108.
நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (அந2) துறை, சென்னை–9
நிதி (ந.நி (ம) கு.வ/ நிகு IV/ W&M-1) துறை, சென்னை–9.
அனைத்து மாவட்ட ஆட்சித் தலைவர்கள்.
உதிரி/நகல்.

/ஆணைப்படி அனுப்பப்படுகிறது./

பிரிவு அலுவலர்.